1987 ஏப்ரல் 6]

திரு. எப். எம். இராசரத்தினம்: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் வேறு ஏதேனும் பகுதிகளில் இந்தமாதிரி போக்கு வரத்துத் துறையின் சார்பில் பேருந்து நிலையங்கள் கட்டும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, விழுப் புரம் போன்ற பல இடங்களில் கட்டப்பட வேண்டுமென்று செயற் குறிப்பு இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர் கோவிலில் கட்டப்பட்டிருக்கிறது. இப்படி பல இடங்களில் கட்டு வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். சில இடங்களில் கட்டிக்கொண்டிருக்கிறோம். அதுபற்றிய முழுமை யான விளக்கம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 314 முதல் 319 முடிய மாண்புமிகு சுற்றுலா மற்றும் மின் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

சேலம் மாவட்டம், மேச்சேரி பேரூராட்சி புட்டாரெட்டியூரில் அருந்ததியர்களுக்கு வீடுகள்.

320—(*வினா எண் 5173) திரு. செ. செம்மலை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி பேரூராட்சிக்குட்பட்ட புட்டாரெட்டியூர் அருந்ததியர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 10-40)

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அரசு தற்போது செயல்படுத்தி வருகிற என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களின் மூலம் கட்டிக் கொடுக்கப்

படுகிற வீடுகளைப் பொறுத்தவரையில் ஊராட்சிகளுக்கு மட்டுமே முன்னுரிமை என்ற அடிப்படையில் ஊராட்சிகளுக்குத்தான் பெரும்பாலும் அவை ஒதுக்கப்படுகிறது. பேரூராட்சிகளுக்கு அப்படிப்பட்ட திட்டங்களின் கீழ் ஒதுக்கப்படுவதில்லை. எனவே இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இடத்திற்கு நடப்பாண்டிலே தாட்கோவின் மூலமாக வீடுகளை ஒதுக்கித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்கின்ற இடத்திற்கு பட்டா இருக்குமேயானால் நடப்பாண்டில் அந்த இடத்தில் வீடு கட்டிக் கொடுக்கப்படும்.

திரு. மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்களுடைய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது பேரூராட்சியில் அரிசனங்கள் வாழக்கூடிய பகுதிகளில் பட்டா இருக்குமேயானால் வீடுகள் ஒதுக்கப்பட்டு தாட்கோவின் மூலமாக கட்டிக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அது அவருடைய தொகுதிக்கு மட்டுமேதான் பொருந்துமா? மாநிலத்திலுள்ள மற்ற உறுப்பினர்களின் தொகுதியில் உள்ள பேரூராட்சிகளில் இப்படி பாதிக்கப்பட்ட நிலையில் அரிசனங்கள் இருந்தால், அவர்களுக்கு பட்டா இருந்தால் வீடு கட்டிக் கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் உள்ள மாவட்ட ஆட்சியாளர் பரிந்துரை செய்து இங்கே அரசுக்கு அனுப்புகிறபோது அதனை முன்னுரிமையாகக் கருதி எங்கெங்கெல்லாம் வீடுகள் இல்லையோ அதன் படியும், பொருளாதார அடிப்படையிலே அவர்கள் வாழ்கிற சூழ் நிலைக்கு ஏற்றவாறு, அந்தப் பகுதியினுடைய சூழ்நிலையை ஏற்றும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

1987 ஏப்ரல் 6]

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி போன்ற திட்டங்களின் கீழ் பேரூராட்சிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க முன்னுரிமை வழங்கப்படும் என்று சொன்னார்கள். அதேபோல் தாட்கோவின் மூலமாக கட்டப்படுகிற வீடுகளைப் பொறுத்தவரையிலும் பேரூராட்சிகளில் கட்டிக்கொள்ள அரசு அனுமதி வழங்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பேரூராட்சிகள் பற்றித்தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆர்.எல்.இ.ஜி.பி., மற்றும் என்.ஆர்.இ.பி. திட்டங்களின் வாயிலாக பேரூராட்சியில் வீடுகள் கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்களும் கேட்கிறார்கள். பல பிரச்சினைகளையும் அந்த மக்களுடைய நலத்தையும் கருதி கொஞ்சம் கொஞ்சமாக, பொருளாதார அடிப்படையில் அதாவது நிதி நிலைமைக்கேற்ப அந்தந்தப் பகுதிகளில் வாழ்கிற மக்களுக்கு தாட்கோ மூலம் வீடுகள் கட்டுகிற திட்டத்தின் வாயிலாகக் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது ஆதிதிராவிட மக்களுக்கு தாட்கோவின் மூலம் வீடு கட்டிக் கொடுப்பதாகத் தெரிவித்தார்கள். இந்த நடப்பாண்டில், 1987-88-ல், ஆதி திராவிட மக்களுக்கு தாட்கோவின் மூலமாக எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு ஆதி திராவிடர் நல மானியக் கோரிக்கை வருகிறது. அதிலே சொல்லப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.